## Chapter – 8 – Contd..

## Speech for 11-December-2021

வேதாந்தம் தூய அறிவை பெற்ற வழியை பற்றி சிந்திக்க - அடுத்த நான்கு theme -களை எடுத்துக் கொள்கிறேன் உள்ளுணர்வு முதலில் வருகிறது. அதைத் தொடர்வது பகுத்தறிவு. தர்க்க அறிவால் உள்ளுணர்வை மதிப்பிட முடியாது. பகுத்தறிவில் தொடங்கினாலும் வேதாந்தம் உள்ளுணர்வையே முடிவானதாக கொள்கிறது என்ற மூன்று theme -கள் இருந்தாலும் நடைமுறைக்கு பகுத்தறிவு மேற்பரப்பை ஒழுங்குபடுத்துகிறது - உள்ளுணர்வு திரைக்குப்பின்னால் செயலாற்றுகிறது என்பது நடைமுறைக்கு சற்றே ஏற்றதாக இருக்கிறது.

அதை விளக்கும் போது கர்மயோகி - அன்பர்கள் உள்ளுணர்வில் பக்குவப் படவேண்டும். பக்குவத்தின் பவித்திரத்திற்கு ஏற்ப பூரண ஞானம் நேரடியாக கிடைக்கும் என்கிறார். ஆனால் உள்ளுணர்வு ஆழப் புதைந்து இருப்பதால்- உள்ளுணர்வையும் புலன்களின் சாரத்தையும் பிரித்து அறிய முடியாததால்- உள்ளுணர்வுக்கு புரிந்ததை பகுத்தறிவும்- மனமும்- புரிந்து கொண்டால்தான் செயல்படுத்த முடியும். அப்படி ஒவ்வொரு விஷயத்தையும் பகுத்தறிந்து புரிந்து கொள்ள நாம் எடுக்கும் கருவி எப்படிப்பட்டது என்பது முக்கியம். அதன் அடிப்படையாக எந்த தர்க்கம் இருக்கிறது, அதன் பின் உள்ள உண்மையான காரணம், அது தரும் பகுத்தறிவு, அதன் பின், அதன் மீதான நம் முடிவு, அந்த முடிவை எடுத்தவுடன் நம் மனம், உணர்வு, சூழல் ஆகியவற்றை கவனிப்பது, அதன் பின் அதனுடன் ஒன்றி அதன் பின் உள்ள நுண் சட்டங்களை கவனித்தல் என்று படிப்படியாக systematic -ஆக, conscious -ஆக செயல்பட முடிந்தால், நாம் தூய அறிவு என்னும் நிலைக்கு வருவோம். அது செய்ய வேண்டியதை உட்குறலாக, உள்ளுணர்வாக கட்டளை இடும். அதை மனம் ஏற்றுக்கொண்டால் அது பகுத்தறிவாகிறது. சென்ற கூடலில் சொன்னது போல இதுவே முடிவான அறிவல்ல. ஒரு உயர்ந்ததை பகுத்தறியும் திறமையால் உயர் நோக்கால், படைப்பின் அடிப்படை ஞானத்தை அறியும் முறை இது .

என் பார்வை என்னவென்றால் , வாழ்வில் நாம் பெற்ற பாடங்களை, அது தந்த ஞானங்களையே நம்மால் சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்த முடியாதபோது, உள்ளுணர்வு பகுத்தறிவு ஆகியவை சொல்லியும் கூட அதை ஏற்றுக் கொள்ளாத மனம், செயல்படுத்தாத உணர்வு, இருக்கும் போது நாம் எப்படி உயர் ஞானங்களை பெற முடியும் என்பதுதான். அதற்கான விளக்கமாக intelligence , intellect போன்றவற்றை சென்ற கூடலில் கூறினேன்.

அதை ஒரு உதாரணம் மூலம் விளக்க முயல்கிறேன். மின்சாரத்தை எடுத்துக் கொள்வோம் அதை பல்வகை சக்தி அல்லது பல நிலை மின்னழுத்தத்தை கொண்டதாக நினைக்கிறோம். அதை bulb -பில் செலுத்தும் போது வெளிச்சமாக வருகிறது. Fan-னில் செலுத்தும் போது காற்றாக வருகிறது. ஏசியில் செலுத்தும் போது குளிர்ந்த காற்றாக வருகிறது. மிக்ஸி கிரைண்டறில் செலுத்தும் போது அது அரவையாக வருகிறது. மின்சாரத்தில் இவை இயங்குவதாக இருந்தாலும் நன்றாக கவனித்துப் பார்த்தால், அது செலுத்தப்படும் கருவியின் mechanisam-மே அதன் வெளிப்பாட்டை முடிவு செய்கிறது.

அது போல நம் intelligence என்பது நம் அனுபவங்கள், அதனை புலன்கள் புரிந்து கொண்டதற்கான ஒரு data . அதை எந்த கருவியில் செலுத்துகிறோமோ அதன் வழியாக அதன் intellect -ஆக வருகிறது. அந்த கருவியின் mechanism புரிந்தால், அதன் வழியாக அதை செலுத்தினால், தேவையான ஞானம் வெளியே வரும். உதாரணமாக தோல்விகளுக்கான நம் data உடலில் செலுத்தப்படும் போது, ஏற்கனவே செய்த தவறை தவிர்த்து செய்யும் போது, அதாவது ஒரு உயர்ந்த உண்மையை பகுத்தறிந்து செய்யும் போது, உடல் செய்யும் செயலில் ஒரு தரம், செம்மை வருகிறது. அது புத்தியின் சாரம். அதே போல நம் data -க்கள் உணர்வின் வழியாக செலுத்தும் போது, உயர் உண்மையின் பார்வையில், தூய காரணம், உண்மை காரணம் ஆகியவற்றின் பார்வையில் பகுத்தறிந்து, மனம் தர்க்கம் செய்து ஏற்றுக் கொள்ளும். அப்போது சுமுகத்துக்கான ஞானம் அதற்கான உள்ளுணர்வு கிடைக்கிறது. ஆன்மாவின் பார்வையில் செலுத்தும் போது நேரடி ஞானம் கிடைக்கிறது. அதற்கு மிகப் பெரிய உதாரணம் நாம் பதட்டமாக பிரச்சனையில் இருக்கும் போது அன்னையிடம் அமர்ந்தால் கிடைக்கும் அமைதி நம்பிக்கை என்னும் ஆன்மாவின் பண்புகளால் வருவது. அது உடனே பிரச்சனைக்கு தீர்வை உள்ளுணர்வாக தருவதைக் காணலாம் அல்லது பிரச்சனை தீர்ந்து போவதையும் பார்த்து இருக்கிறோம். இந்த இரண்டையும் தாண்டி intellectuality தீட்க்ஷண்யம் என்ற ஒன்றை குறிப்பிடுகிறார். உள்ளுணர்வு அனுபவமாக மாறும் போது கிடைப்பது அது. நம் அனுபவத்தின் சாரம் அதன் தனித்தன்மை அதன் பொதுத்தன்மை மூன்றும் புரிந்தால், வருவது தீட்சண்யம். ஞானம் பெற்றவுடன் பார்வையை தீட்க்ஷண்யம் மிக்கது என்று கூறுவது வழக்கம். அது ஞானிகளின் பார்வையில், மூன்றாம் பார்வையில் உணர்வது எதிர்காலத்தை உணர்வது என்று எடுத்துக் கொள்ளலாம் . இந்த யோகத்தைப் பொறுத்தவரை அதை காலத்தைக் கடந்த நிலை என்கிறார். அதாவது தீட்சண்யம் பெறுவதன் மூலம்

காலத்தை சுருக்க முடியும், எல்லாவற்றிலும் அதற்கு தேவையான காலத்தை சுருக்க முடியும் என்பது ஒரு பொருள்.

ஒரு முறை கர்மயோகியிடம் நீங்கள் அன்பர்களை பார்க்கும் காலத்தில் கண்ணில் தீர்க்கமாக பார்ப்பீர்கள். அதன் மூலம் அவர்கள் ஆன்மாவை அதன் விருப்பத்தை பார்ப்பீர்கள் என்று சிலர் கூறுவார்கள் அப்படி பார்க்க முடியுமா? என்னை அப்படி பார்த்தீர்களா? என் ஆன்மா என்ன சொல்கிறது என்று கேட்டேன். அவர் சிரித்தார் அப்படி ஒரு power என்னிடம் இருப்பதாக நினைக்கிறார்கள் அது அவர்களது பக்தியின் வெளிப்பாடு. எனக்கு அப்படிப்பட்ட power எல்லாம் இல்லை. ஆனால் ஒரு மனிதன் , பகவான் சொல்லும் mental development மூலம் ஒருவரை முழுதும் அறியும் திறமையை தீக்ஷண்யத்தை உள்ளுணர்வை வளர்க்க முடியும். எனக்கு அது வளர்ந்து இருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாம் என்றார்.

உதாரணமாக - நாம் பிறரிடம் பேசும் போது- நம் மனம் தயாராக இருப்பதில்லை. புலன்களே தயாராக இருக்கிறது. நம் விருப்பு வெறுப்புக்கு, நம் அறிவுக்கு ஏற்ப குறிக்கிடுவதற்கு தயாராக இருப்போம். அதாவது நாம் கேட்பது பேசுபவரின் சாரத்தை அல்ல - அவருக்கு நாம் என்ன பதில் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே கேட்கிறோம். அதன் அடிப்படையாக நம் அபிப்பிராயம் நம் மனதில் தயாராக காத்திருக்கிறது. மனம் சொல்ல வேண்டிய பதிலை ஆசை போட்டு கொண்டு இருக்கும். அப்படி இல்லாமல் பேசுபவர், பேசுபவரின் கருத்து, மனப்பான்மை, சாரம், நோக்கம், ஆகியவற்றை மட்டுமே நம் மனம் கவனித்தால் - குறிக்கிடும் பழக்கம் இல்லாமல் கவனித்தால்- , அதனைப் பற்றி உட்பார்வை, உள்ளுணர்வு சில நிமிடங்களிலேயே கிடைக்கும். அவரைப் பற்றி முழுதும் புரியும் என்றார். அதே போல நாம் பேசும் போது நம் கண் அலை பாயும் பேசுபவரின் உடலை அளக்கும். அக்கம் பக்கம் திரும்பும். அப்படி இல்லாமல் நாம் அத்தனை energy , consciousness -ஐ கண்ணில் தேக்கி உற்றுப்பார்த்தால் - விளக்கத்தில் அவர் தடுமாற்றம் - நிலைகொள்ளாதன்மை போன்றவை நம் கண்ணில் படும். நம் உள்ளத்தின் உண்மை கண்ணில் வெளிப்படும். பேசுபவர் பொய் பேச நினைத்தாலும் வாய் தவறி உண்மை வரும் அல்லது அவர் பதட்டம், நமக்கு உள்ளுணர்வைத் தரும் என்கிறார்.

ஒரு முறை ஒரு அன்பர் பேசும் போது society -க்கு பெரிய தொகை ஒரு project -குத் தரப் போவதாக பேசிக் கொண்டிருந்தார். கர்மயோகி அவரையே பார்த்துக் கொண்டு இருந்தார். நானும் பார்த்துக் கொண்டு இருந்தேன் எனக்கு அவர் மிகுந்த aspiration- னோடு பேசுவது போலவே தோன்றியது.

ஆனால் பத்து லட்சம் வரை தருகிறேன் என்று சொல்ல நினைத்து, பத்தாயிரம் வரை தருகிறேன் என்று சொல்லி விட்டு, - sorry பத்து லட்சம் வரை என்றார். அவர் சென்ற பிறகு there is no depth in his aspiration என்றார் கர்மயோகி. அவர் அதன் பிறகு வரவில்லை. பத்து லட்சம் தருகிறேன் என்று சொல்ல வந்தவர் கர்மயோகியின் தீட்சண்யத்தால் உண்மையில் அவருக்கு தர விருப்பம் இல்லை என்பது வெளியே வந்து விட்டது.

அது போல மூன்று ஆண்டுகளுக்கு முன் மிக பிரபலமாக இருந்த ஒரு eonomic புத்தகம் இந்தியா 5 trillion economy அடையும் முறை பற்றிய புத்தகம். எல்லா review-விலும் ஆஹா ஓஹோ என்று புகழப்பட்டது. கர்மயோகிக்கு இந்தியாவின் prosperity பற்றிய விஷயங்கள் மிகவும் பிடிக்கும் என்பதால் - அந்த புத்தகத்தை வாங்கி அவருக்கு படிக்கக் கொடுத்தேன். இருநூறு பக்கம் கொண்ட புத்தகம் அது. 10 அல்லது 15 பக்கம் படித்தவுடன் இவர் பழமைவாதி இந்தியா உலகத்தின் தலைவனாக- அமெரிக்கா போன்ற வளமிக்க நாடாக உயர வேண்டுமானால் இந்த முறைகள் உதவாது என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. காரணம் நானும் அவரிடம் பேசுவதற்காக அதை முழுவதும் படித்துவிட்டே சென்றேன். பல இடங்கள் எனக்கு பிடித்து இருந்தது. எப்படி அதை பத்து அல்லது பதினைந்து பக்கத்தைப் படித்துவிட்டு சொல்கிறீர்கள் என்று கேட்டேன். எழுத்தாளரின் consciousness-வோடு ஒன்ற முடிந்தால், அவர் நோக்கம், எண்ணம், மனப்பான்மை ஆகியவற்றை முழுதும் புரிந்து கொள்ளலாம் என்றார். அது தீட்சண்யம்.

இன்னொரு முறை ஒரு அன்பர் பார்ப்பதற்கு மிகச் சாதாரணமாக இருந்தவர் கர்மயோகியை பார்க்க வரும் போது ஒரு கவரில் offering ஐ கொடுத்தார். 100, 500, 2000 நோட்டுக்களை கொண்டதாக இருந்தது. பார்க்கும் போதே அதில் கணிசமான தொகை இருப்பது தெரிந்தது. அவர் சென்ற பிறகு அன்று மதியம் offering களை எண்ணி கட்டி வைக்கும்போது அந்த கவர் அதே மையத்திலிருந்து வந்த இன்னொரு அன்பரிடம் எண்ண சென்றது. அதை எண்ணச் சொன்னார். அவர் அதை எண்ணி விட்டு 5000 என்றவர் பிறகு sorry ஐம்பதாயிரம் என்றார். அவரும் சென்ற பிறகு முன்னவர் மேல் இவருக்கு இருக்கும் வெறுப்பு ஐம்பதாயிரத்தை 5,000 ஆக்கி விட்டது என்றார். அந்த இருவருக்கும் மனஸ்தாபம் இருப்பது எனக்கு தெரியும். அது கர்மயோகிக்கு தெரிய வாய்ப்பேயில்லை. இருவரும் ஒன்றாக வருவதும் இல்லை. இருந்தாலும் சரியாக சொன்னார். இவையெல்லாம் தீட்சண்யம் என்பதற்கான உதாரணங்கள். இதையும் இதற்கு முந்தைய நிலைகளான logic , reason , observation , perception போன்றவைகள் எல்லாம் ஏதோ ரிஷி முனிவர்களுக்கு மட்டுமே உரியதல்ல. முயன்றால் அன்பர்கள் பெற முடியும் என்பதே அவர்

கருத்து. புலன்கள் தரும் data-வையும் அதன் அடிப்படையான அபிப்பிராயங்களையும் விட்டு வெளியே வந்தால் நம் வேலை, நம் துறை, நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள், சூழல் ஆகியவற்றை ஆராய்ந்தால் மனித மனதிற்கான வேறுபாடுகள், அதன் நிலைகள், அதன் சட்டங்கள் நமக்கு நல்லத் தெளிவைத் தரும்.

மனம் சிந்திக்கும் திறன் உடையது. அது பகுத்தறிவு ஆக வேண்டும் என்றால், அது புலன்களால் பெற்ற அறிவை ஒட்டி சிந்திக்காமல்- ஆன்மாவின் பார்வையில் சிந்தித்தால்-, அபிப்பிராயங்களின் வேகம் குறைந்து, மௌனத்தின் வடிவத்தை பெறும். அறிவு தீட்சண்யம் பெறும் என்பது சட்டம். இதை positive -ஆக நம்மால் புரிந்துக் கொள்ள கடினமாக இருக்கிறது என்று கூறுவோம்., அதை வேறுபடுத்தி உணரவும் ஒரு வழி கூறுகிறார். நாம் அன்னை முறைகளை பின்பற்ற நினைக்கும் போது – அல்லது- நமக்கு பிடிக்காததை செய்ய வேண்டியது வரும் போது - நாம் க்ஷண நேரத்தில் சொல்லும் சாக்குகளை கவனித்தால் -நம் அறிவின் தீக்ஷண்யம் என்ன என்பது நமக்கு புரியும் என்கிறார். அது வந்த வழியை புரிந்து கொண்டால் - அதன் அடிப்படை புலன்கள் என்பது புரிந்தால் - அந்த பாதையை விட்டு விலகும் சூட்சுமமும் நமக்கு புரியும் .

அது நம் சித்தத்தை - உயர் சித்தம் ஆக்கும். அது உள்ளுணர்வு, உட்பார்வை ஆகியவற்றை தரும். அதை செயல்படுத்த - பகுத்தறிவு அதை பின்னணியாக வைத்து விவேகம்,பாகுபாடு பார்த்து மேல் மனதை ஏற்றுக் கொள்ள வைக்கும். அந்த நிலையை contemplation என்கிறார். ஒன்றைப் பற்றிய தீவிர சிந்தனை அல்லது அதிலேயே ஒன்றுவதால் கிடைக்கும் ஞானம். பல விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அப்படி நடந்தவையே.

குறைந்த பட்சம் வாழ்வில் நாம் துன்பம் , தவறு, தீமை, குறை என்று நினைப்பவை பரிணாமத்தின் ஒரு நிலை. சரி, நன்மை, நிறைவு, முன்னேற்றம் என்பவை அதன் மேல் நிலைகள். நாம் தவறு, தீமை, குறை ஆகியவற்றின் பகுதியாக இருக்கும்போது -அதை புலன்களால் வந்த அனுபவம் அதன் மூலம் பெற்ற அறிவு ஆகியவற்றை வைத்து ஆராய்கிறோம். அது வேதனைத் தருகிறது. புலன்களில் இருந்து வெளியே வந்து ஆன்மாவின் மூலம் அதன் அடுத்தப் பகுதியை அதாவது முழுமையை பார்த்தால் அது வளர்ச்சியின் ஒரு நிலை, மாறுதலின் ஒரு நிலை என்று புரியும் மனத்திலிருந்து ஆன்மாவிற்கு உயரும்போது புலன்களில் இருந்து வெளியே வருகிறோம். வரும் நிலைக்கேற்ப ஞானம் கிடைக்கிறது. நுணுக்கம் புரியும் பொது தான் தத்துவம் புரியும். அது தீட்சண்யத்தை , ஆன்மீக ஞானத்தைத் தரும்

குறிப்பாக அன்னையை அடுத்தடுத்த நிலைகளில் ஏற்றுக் கொள்ள ஆன்மீக பார்வை என்னும் இத்தகைய contemplation தேவை. அறிவுக்கு எட்டாதது சித்தத்திற்கு எட்டும் என்னும் நிலை அது. வேதாந்திகள் பெற்ற ஞானத்தை - அன்னையின் அவதார நோக்கத்தை நாம் முழுதும் அறிவதன் மூலம் - பெற முடியும் என்கிறார்..

இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதன் process புரிய வேண்டும். முதலில் இது வரை நம் வாழ்வில் நடந்தவற்றை அன்னையின் பார்வையில், நம்மில் அன்னை விரும்பும் பரிணாம வளர்ச்சி எது என்னும் பார்வையில் பார்க்க வேண்டும் . பின் அப்படி நடந்ததற்கான காரணங்கள், அதில் நம் பங்கு, செய்த காரியங்கள் ஒன்றுக்கொன்று இருக்கும் தொடர்பு, அது பற்றிய ஒரு பாரபட்சம் இல்லாத, அபிப்பிராயங்கள் இல்லாத, மனதின் தர்க்கம், அதன் மூலம் பெறும் தூய ஞானம், ஆகியவற்றை படிப்படியாக செய்தால் முதல் நிலையில் ஒரு உட்பார்வை insight வரும். அதை இப்போது நடப்பதில், பொருத்திப் பார்க்கும்போது, பின் செய்து பார்க்கும்போது -அனுபவமாக சேருகிறது. அது எதிர்காலத்தில் ஆன்மா சுட்டிக் காட்டுவதை உணரும் அது உள்ளுணர்வாக வளரும்.

நாம் எப்போதும் ஒரு எதிர்பார்ப்பை வைத்தே செயல்படுகிறோம் .அதற்கு அடிப்படையாக நம் முன் முடிவுகளும், அபிப்பிராயங்களும் இருக்கிறது. அதை உருவாக்கியது - நம் புலன்களின் தேவைகள்- நம் புலன் பெற்ற அனுபவங்கள். அது - மனதில் எண்ணமாக வந்து வழி நடத்தி- உணர்வையும் உடலையும் செயல்பட வைக்கிறது. அதற்கும் நம் புலன்களின் விருப்பங்களே அடிப்படையாக இருக்கிறது. அவற்றிலிருந்து வெளியே வந்து, அதன் செம்மைக்காக perfection -னுக்காக பார்க்கும் போது, எதிர்பார்ப்பு, அவசரம் போன்ற புலன்களால் விரும்பப்படும் அடிப்படையில் இருந்து- வெளியே வருகிறோம். அதாவது புலன்களின் ஆதிக்கத்தில் இருந்து வெளியே வருகிறோம். அப்போது செம்மைக்கான சூட்சமம் நமக்கு கிடைக்கிறது. அவசரம்- பொறுமையாக மாறுகிறது. பொறுமை- விடா முயற்சியாக, வினை உடைமையாக, (Persevearance) செயலாக, நோக்கமாக மாறுகிறது. அது நம் திறமை, திறன், ஆகியவற்றின் சாரத்தை வெளிப்படுத்தும். நம் அனுபவங்கள் அதாவது data ஒன்றே. அதை புலன்கள் மூலம் பார்க்கும் போது எதிர்பார்ப்பு அவசரமாக இருக்கிறது. அது intellect ஆக மாறும் போது பொறுமையின் அவசியம் புரிகிறது. Intelectuality தீட்க்ஷண்யமாக மாறும் போது அது செம்மைக்கான வினையுடைமை ஆகிறது. புலன்களில் இருந்து வெளியே வந்து பார்த்தால், செம்மைக்கான ஞானம் கிடைப்பதை உயர் ஞானம் எனலாம். அதைத் தரும் மனதில் தர்க்கம், காரண ஆய்வு, பகுத்தறிவு, pure reason

-ஐ தரும். அது செம்மைக்கான உயர் ஞானம். அது ஒரு விஷயத்தில் சாரம் புரிவது. இதை நேரடியாக - எதிர்பார்ப்பு இல்லாமல், வேலையில், வேலைக்காக ஈடுபடும் போதும் அடைய முடியும். Identification with the work.

நான் சில கூடல்களில் சொன்ன உதாரணத்தை மீண்டும் சுருக்கமாக சொல்கிறேன். இறக்குமதி செய்யப்பட்ட ஒரு product அவர்கள் தந்த test report படி வரவில்லை. ஏன் வரவில்லை என்று சிந்தித்த போது client-க்கு அவர் விரும்பிய சிறந்ததையே தர வேண்டும் என்று எனக்குத் தெரிந் த அத்தனை chemical logic-ஐ சிந்தித்து, அதனுடன் வந்த technical data sheet -ஐ பார்க்கும் போது அது ஏன் இங்கு சரியாக வரவில்லை என்பது புரிந்தது. அதன் மூலம் ஒரு புது formula பிடிபட்டது. அது என்னுடைய சொந்த product வெளிக் கொணர உதவியது. வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு சென்றேன். அதே போல ஸ்தாபகரின் , முதலாளியின் conciouness உடன் ஒன்ற முடிந்தால் அவர் அளவிற்கு வளரலாம் என்று எழுதி இருப்பார். அது சில அன்பர்கள் வாழ்வில் நடந்தது. என் வாழ்விலும் நடந்தது . அதை தாண்டிய விஷயம் என்ன வென்றால் - நான் இன்று பெற்ற தொழில் அறிவு நான் படித்து பெற்றது அல்ல. என் முதலாளியுடன் விறுப்பு வெறுப்பு இன்றி அவர் சொல்லே வேத வாக்கு என்று இருந்தேன். அவருக்கு தொழிலில் முப்பது வருட அனுபவம் இருக்கிறது. அவர் எல்லாவற்றையும் சொல்லி தரவில்லை என்பதுதான் உண்மை. ஆனால் இன்று நான் சப்ஜெக்ட் பற்றி பேசும்போது - எப்படி உங்களுக்கு இவ்வளவு தெரிந்தது என்பார்கள் , சிலர் அப்படியே உங்கள் பழைய முதலாளி போல் பேசுகிறீர்கள் என்பார்கள். அது நான் அவருடன் நான் கொண்ட identification ஆல் வந்தது , அதனால் அவர் பெற்ற ஞானம் எனக்கு சூட்சுமமாக வந்து இருக்கிறது என்பது புரிந்தது.

இதை Management - princple -இல் -வேலையில் திறம் -, செயலின் நேரடி ஞானம் என்று கூறலாம். நேரடியான ஞானம் ஒவ்வொரு செயலிலும் மறைந்துள்ளது என்பது அதன் பொருள். அதற்கு அடுத்தப் படியாக புலன்களால் சிதைகப்படாத அனுபவம் நேரடி ஞானமாகிறது என்கிறார். என் முதலாளியுடனான உறவு கர்மயோகி சொன்னார் என்பதற்காக விறுப்பு வெறுப்பு இன்றி இருந்தது. அங்கே என் புலன்களுக்கு வேலை கொடுக்கவில்லை. வேலைக்கான அறிவு , மற்றும் அனுபவம் மட்டுமே பெற வேண்டும் என்பதே என் குறிக்கோளாக இருந்தது. அதனால் நான் பெற்ற அனுபவம் அப்பிராயங்களாக மாறாமல் இருந்தது அதாவது புலன்களால் சிதைக்க படாமல் இருந்தது. இதைத் தான் psychological experience என்று சமர்ப்பணம் குறிப்பிட்டார் என்று நினைக்கிறேன். மேலே சொன்ன உதாரணங்கள் என் psychological experience எனலாம். ஒரு விஷயத்தில்

ஒன்றுவது என்றால் என்ன என்பதை புரிய வைத்தது. இதைத் தான் வேதாந்தம் -பூரண ஞானத்தையும் -மனிதன் நேரடி ஞானத்தையும் - இணைக்க முயல்கிறது என்கிறார்.

இந்த நிலையை தான் intellectuality. தீட்சண்யம் என்கிறார். அது ஒரு விஷயத்துடன் ஒன்றுவதால் பெறும் பார்வை - உள்ளூறை ஞானம் -நேரடி ஞானம் என்றும் சொல்லலாம். நமக்கு சூட்சுமம் குறைந்தால் அதற்கான பார்வை குறைகிறது. சூட்சுமம் குறைவது நம் புலனுணர்வு அதிகமாவதால். அதனால் அறிவும் -தெளிவும் குறைகிறது. உழைப்பு- செயலாக மாறுவது முதல் நிலை. அதன் பின் -உழைப்பு -அனுபவத்தால் திறமையாகிறது. திறமை செயலின் தரத்தை - செம்மையை - உயர்த்துகிறது. தரம் உயர்ந்த நிலையில், அதில் ஆன்மாவுக்கான பண்பை சேர்க்கும் போது செயல் யோகமாகிறது. அது அந்த செயலுக்கான சூட்சும ஞானத்தை, நேரடி ஞானத்தை இறைவனின் விருப்பம் என்ன என்பதை காட்டும். புலன்களால்- புலன்களில் விருப்பத்திற்கான எதிர்பார்ப்பு இருந்தால் இந்த ஞானம் கிடைக்காது.

நாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் -கவனத்துடன் எதிர்பார்ப்பு இல்லாமல், அபிப்ராயம் இல்லாமல் கூர்ந்து கவனித்தால் -தெளிவு உயர்ந்து ஞானம் வளர்ந்து நேரடி ஞானத்துடன் தொடர்பு ஏற்படும். அது செயலில் இறங்கி-செயல் யோகமாகி ] இறைவனின் கருவியாகும். செயலில், நடப்பில், சூழலில், உள்ள ஞானத்தை விடுவிப்பது வேதாந்த ஞானம். அதன் வழி புலன்களிலிருந்து வெளியே வருவது. உதாரணமாக காலையிலிருந்து நம்மிடம் வருபவர், பேசுபவர், செய்வதை, சொல்வதை எல்லாம் கவனித்தால், அதை முழுமையாக நம்பினால், மாலையில் நமக்கு பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கும். ஆனால் நம்மில் பெரும்பாலோர் அப்படி இல்லாமல், ஓரளவு யோசித்தே எதையும் நம்புகிறோம். அந்த அளவிற்கு நாம் புலன்களிலிருந்து வெளியே வருவதால் மடையன் என்று பெயர் எடுக்காமல் இருக்கிறோம். நம் அறிவு, அறியாமையாவது நாம் எந்த அளவிற்கு புலன்களின் பிடியில் இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது. புலன்களை ஒதுக்கினால், பொருள்களின், மனிதர்களின், சூழலின் , வாழ்வின் ஞானம் புரிந்து அறியாமை அறிவாகிறது. அந்த அறிவு ஞானமாகி மனம் அதை நேரடியாகப் பெறுகிறது. அந்த ஞானம் பெற்ற மனம் எண்ணங்களாக, செயலில் வெளிப்படும் போது, செயல்கள் அனைத்தும் பூரண ஞானம் பெற்ற செயலாக இருக்கும்.

வளர்ந்து அனுபவப்பட்ட பின் ,இனி தகப்பனார், ஆசிரியர் அறிவுரை தேவை இல்லை என்று பையன் அல்லது மாணவன் மாறுவது போல, புலன்களால்

அறியும்  இந்த மனம் இனி தேவையில்லை என்னும் முடிவுக்கு நாம் வர வேண்டும். உடலின் இழுப்புக்கு செல்வது தவறு என்று புரிந்து அதிலிருந்து வெளியே வருகிறோம். உணர்ச்சி உணர்வு ஆகியவற்றின் இழுப்புகளுக்கு செல்வது தவறு என்று புரிந்து விட்டதால் தான் இன்று சற்றே நாகரிகத்துடன் இருக்கிறோம். ஆனால் மனதின் இழுப்புக்கு செல்லக் கூடாது என்பது தெரிந்தும், புரிந்தும், நாம் அதை விடவில்லை. புலன்களில் இருந்து வெளியே வர வேண்டுமானால் நமக்கு இருக்கும் ஒரே வழி  இனி அன்னை மூலமே எதையும் அறிவேன் என்ற முடிவு.  அதுவே எல்லா இறை ஞானத்தையும் தரும் ஒரு பெரிய முடிவு.

அதனால் கிடைக்காத ஞானமே இல்லை .  நமக்கு அந்த அளவிற்கு இல்லை என்றாலும்  கூட, குறைந்தபட்சம் சத்தியத்திற்கான  சாதுர்யம், சமயோசிதம் கூட இருப்பதில்லை. குறைந்தபட்சம் வாழ்வு என்ன சொல்கிறது என்பதை கூட நம்மால் கண்டுபிடிக்க முடிவதில்லை. அதற்கான அன்னை முறைகளின் அடிப்படையில்  விவேகம் பாகுபாடு பார்க்க தெரியவில்லை. அவ்வளவு ஏன், ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு விளக்கம் கொடுத்த பின்னும், ஒரு விஷயத்தைப் பற்றி கர்மயோகி என்ன சொல்லி இருக்கிறார் என்று நேரடியாக தெரிந்து கொள்ள கூட நாம் முயல்வதில்லை. புத்தகங்களில் வெளிப்படையாக சொன்னதையே பெற முடியாத நம்மால், இறைவனிடமிருந்து சூட்சுமமாக நேரடி ஞானத்தை எப்படிப் பெறமுடியும்?  நமக்குத் தேவை பிறரது ஞானம். அது உண்மையில் நாம் பெற விரும்பிய ஞானமில்லை. அந்த நபர் நமக்கு தேவை என்பதால் அவர் சொல்வதை கேட்டுக் கொள்கிறோம். அவற்றையெல்லாம் கர்மயோகி எங்கே சொல்லியிருக்கிறார்கள் என்று கேட்கும் அறிவு கூட நமக்கு இல்லாமல் இருந்திருக்கிறோம்.   பிறருக்கு அறிவுரை சொல்பவர்கள், அன்னை பண்புகளைப் பற்றி சொல்பவர்கள், அதை கடைப்பிடிக்காதவர்கள்  என்பதை கவனித்ததில்லை.

இதற்கு சில உதாரணங்களாக பெரும்பாலோருக்கு இருக்கும் சில misconception -களை  எடுத்துக் கொள்கிறேன். மரபுகளை- அது சார்ந்த விஷயங்களைப் பற்றிய அறிவுரைககளை பிறர் தந்த போது, அவையெல்லாம் அவர் எங்கே சொல்லியிருக்கிறார் என்று நாம் கேட்டதே இல்லை. நாமே தேட முயன்றதும் இல்லை. வேணுகானம் என்னும் புத்தகத்தில் நிறைய எழுதியிருக்கிறார். அதன் பிறகு ஒரு overmental force -வும் supramental force -வும் ஒரே இடத்தில் இருந்தால் வரும் பிரச்சினைகளை சில புத்தகங்களில் சொல்லியிருக்கிறார். சிறு தேவதைகளை வழிபடுவதில் வரும் பிரச்சனையை பற்றி சொல்லியிருக்கிறார். இதை செய்யாதே அதை செய்யாதே என்றெல்லாம் வெளிப்படையாக எதையும் எனக்கு தெரிந்து சொல்லவில்லை.

ஆனால் அதன் விளக்கமாக மரபு, பாரம்பரியம், கலாச்சாரம், சுமுகம் ஆகியவற்றை உடைக்கும் விஷயங்களைச் சொல்லி, குறிப்பாக தாலி கூடாது என்பதில் இருந்து, குடும்ப சம்பிரதாயங்களில் கூட கலந்துக் கொள்ளக் கூடாது என்பது வரை பலவற்றை சட்டங்களாகச் சொல்லி, பல குடும்பங்களில் பிரச்சனைகளை ஏற்படுத்தி விவாகரத்து வரை செல்ல வைத்த நல்ல அன்பர்கள் இங்கே உண்டு. அவர்கள் வீட்டில், குடும்பத்தாரிடம் - சம்பந்திகளிடம் அதை அவர்கள் கடைபிடிப்பது இல்லை என்பதையும் கவனிப்பதில்லை. அதன் சூட்சமம் என்ன, அதன் உட்பார்வை என்ன என்று யாருமே கேட்டதில்லை.

அதே போல மின்சாரத் தடை என்றாலே அது கெடுதல் தான் என்று நம்முள் திணிக்கப்பட்டது. அது ஒரு சகுனம் அவ்வளவே. அவர் அதை Pressing Grace ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு ஒளி வரும் போது அது இருளாகத் தெரிகிறது என்று கூறியிருக்கிறார். ஒருவர் factory திறப்பு விழாவின் போது அவர் factory யில் இருந்த transformer வெடித்து மின்சாரம் தடைபட்டது. அப்போது அதற்கு அவர் இத்தகைய விளக்கங்களை தந்திருக்கிறார். அவர் தொழில் இன்று வரை வளர்ந்துக் கொண்டே தான் இருக்கிறது.

இத்தகைய சகுனங்களை நாம் பார்க்க வேண்டும் என்பதன் முறை என்ன என்பது பற்றி நாம் தெரிந்து கொள்ள முயன்றதில்லை. . இதைப் பற்றி நிறைய விளக்கங்கள் கொடுக்கலாம் என்றாலும் சுருக்கமாக சொல்கிறேன். ஒரு விஷயத்தை செய்ய ஆரம்பிக்கும் போது அதற்கு வாழ்வின் அனுமதி, அன்னையின் அனுமதி, இருக்கிறதா என்று பார்ப்பதற்கு முதலில் அதை அன்னையிடம் சொல்ல வேண்டும். சொல்லி விட்டு எந்த initiative -உம் எடுக்காமல் சூழலை கவனித்தால் current போவது, இறப்புச் செய்தி, negative செய்தி வருவது TV , Paper -றில், நம் செயல், துறை, தொழில், தொடர்பான செய்திகள் ஆகியவற்றை conscious -ஆக கவனிக்க வேண்டும் . அதை வைத்து ஒரு விஷயத்தை ஆரம்பிப்பது, சமர்ப்பணம் செய்வது போன்றவை தான் இத்தகைய சகுனங்களை பார்க்கும் முறை. அது போல குறிப்பிட்ட ஒரு பொருளில் நம் கான்சியன்ஸ் ஐ ஒன்றை செய்து அதன் மூலம் சூழலை கவனிப்பது . உதரணமாக ஒரு பல்பில் ஒன்ற செய்து அதற்கு நடப்பதை வைத்து நடக்கப்போவதை அறிவது. அது சில நேரம் படபடக்கலாம் , ஒளியாக எரியலாம், பியூஸ் போகலாம் , எந்த பிரச்சினையும் இல்லாது இருக்கலாம் என்பது போன்றவற்றை கவனித்து அதன் மூலம் நடக்க இருப்பதை அனுமானிப்பது. இவற்றின் அடிப்படை சாரம் என்ன வென்றால் சகுனங்களை கவனிக்கும்போது - நம் conciousness விழிப்பாக இருக்க வேண்டும் என்பதே.

அப்போது தான் அது தர வரும் ஞானத்தை நாம் பெற முடியும். இல்லையென்றால் அது மூட நம்பிக்கை ஆகிவிடும்.

ஒரு விஷயம் நடந்து கொண்டு இருக்கும் போது current போனால், அதற்கு ஒரு பொருள் இருக்கும் என்பது உண்மையே. ஆனால் அது கெடுதலாகத் தான் இருக்க வேண்டும் என்னும் அவசியம் இல்லை. நல்லதுக்காக கூட இருக்கலாம். ஏதோ ஒன்றை குறிப்பாக உணர்த்துவதற்காக கூட இருக்கலாம். அருள் நம்மை ஆன்மாவை நோக்கி திருப்பும் நேரம் அது. அந்த நேரத்தில் பெரும்பாலும் இவர் இப்படி நடந்ததார், இவர் வந்தார், அதனால் இது நடந்தது என்று தான் கூறுகிறோமே தவிர, அடிப்படை தத்துவமான, நான் காரணமாக இல்லாமல் இது நடக்காது என்றும், grace -ஐ நான் எப்படி என் அறியாமையால், என் மனப்பான்மையால் தடுக்கிறேன் என்று பார்ப்பதே current போவதைப் positive-வாக பார்க்கும் வழி. அதுவே ஆன்மாவின் குரலை கேட்கும் வழி.

அதே போல சிலரை negative persons என்று வரையறுப்பது. அதற்கு கர்மயோகி என்ன காரணம் சொன்னாரோ தெரியாது. ஆனால் அவர் சொன்னதாக தன் சுயநலத்திற்காக, பலரை விலக்கி வைத்த பெருமை சிலரை சேரும். இதனால் கர்மயோகி விரும்பிய வளர்ச்சியை காட்டிய சிலர் அவரிடம் வர முடியாமலேயே போய்விட்டது. ஆனால் அதன் சூட்சுமம் என்ன -, கர்மயோகி, பார்க்காதே, offering அனுப்பாதே, mail அனுப்பாதே என்று சொன்னதற்கான பொருள் அவர்கள் negative persons என்பதற்காக அல்ல. அது தன் நிலையை தக்க வைத்துக் கொள்ள சிலர் செய்த உபாயம். அதற்கு உரிய பெரிய விளக்கம் தர முடியும் என்றாலும் இரண்டு உதாரணங்கள் சுருக்கமாகச் சொல்கிறேன்.

ஒரு முறை business consultancy செய்ய ஒரு மிகப் பெரிய கம்பெனியை MSSக்கு consultancy கொண்டு வர விரும்பினேன் அது பற்றி ஒரு அன்பரிடம் பேச சொன்னார். பேசிய போது current போய்விட்டது. கிட்டத்தட்ட முடியும் வரை வரவில்லை. பேசிய பிறகு வேறொரு அன்பர் மூலம் நடந்தது அனைத்தையும், என் மனநிலை உட்பட, நான் உணர்ந்தது அனைத்தையும் கர்மயோகியிடம் தெரிவிக்க வேண்டும். நடந்ததை அப்படியே அந்த அன்பரிடம் சொன்னேன். அந்த அன்பர் கர்மயோகிக்கு நெருக்கமானவர். அவரை முழுதும் அறிந்தவர். அனைத்தையும் சொல்கிறேன். ஆனால் இந்த current போன விஷயத்தை சொல்ல வேண்டாம் என்றார். நான் தான் ரொம்ப நல்லவன் ஆயிற்றே, கர்மயோகியிடமே மறைக்கிறார் என்று நினைத்து , கர்மயோகிக்கு நடந்தது அனைத்தையும் அப்படியே எழுதி மெயிலில் அனுப்பி விட்டேன்.

அதைப் படித்த அந்த நெருக்கமான அன்பர் அதன் பின் உள்ள தத்துவத்தை சொன்னார். current போய் விட்டது என்றால் , suppose Thy Will என்பது நீ consultancy செய்யக் கூடாது என்று இருந்தால் அந்த செய்தி கர்மயோகி room atmosphere-க்கு வந்தால் அது அப்படியே நடக்கும். அப்படி இல்லை என்றால் கர்மயோகியின் நல்லெண்ணம், ஆசி உன்னை consultancy செய்ய வைக்கும். கர்மயோகியின் consciousness வேறு, அவர் atmosphere வேறு. Consicousness மனித உருவத்தின் limitations -க்கு உட்பட்டது. Atmosphere is pure divine என்றார். பிற்காலத்தில் கர்மயோகியிடம் இது பற்றி பேசிய போது அன்னை வாழ்வில் நடந்த ஒரு உதாரணத்தை குறிப்பிட்டு விளக்கினார். ஒரு சாதகர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்தார். மற்ற சாதகர்கள் அன்னையிடம் அவரை பிழைக்க வைக்க வேண்டினார்கள். அன்னை ஒன்றும் சொல்லவில்லை. சாதகர்கள் நோய்வாய்ப்பட்ட சாதகரை சுற்றி இரவில் அமர்ந்து பிரார்த்தனை செய்தனர். காலையில் பிழைத்து விட்டார் என்னும் அளவிற்கு தெளிவுடன் எழுந்தார். அதை மறுநாள் அன்னையிடம் சொன்ன போது அது உங்கள் பிரார்த்தனையால் நடந்தது. நான் அவருக்கு வேறு வேலை வைத்திருந்தேன் என்றார். அதன் சுருக்கம் என்னவென்றால் அன்னை வேறு அன்னையின் consciousness வேறு என்பது.

சில நேரங்களில் pure divine atmosphere -க்கு வரும் போது, சத்திய சூழலுக்கு வரும் போது, சில காரணங்களால் சிலர் பாதிக்கப்படலாம். அந்த பாதிப்பு வராமல் இருக்க- அவரை விலக்கி வைக்க நேரிடுகிறது. அது அதிகபட்ச நல்லெண்ணத்தால் -Thy Will -ஐ மீறி நல்லது நடப்பதற்கு -உயர்ந்த ஆன்மாக்கள் செய்யும் செயல். அது ஒரு வகையான அருள்.

இப்படி ஒவ்வொரு விஷயத்திற்கும் வாழ்வில் சாதாரணமாக நாம் எதிர் கொள்ளும் அத்தனை விஷயங்களுக்கான சட்டங்கள், சூட்சுமங்கள், பார்க்கும் முறைகள், அதற்கு நாம் எப்படி காரணமாவோம் என்று ஏராளமான ஞானத்தை கொட்டி விட்டு சென்றிருக்கிறார். கண் முன் இருக்கும் இந்த ஞானத்தையே எடுத்துக் கொள்ள முடியாத நாம் ,சூட்சும ஞானத்தை எப்படிப் பெறப் போகிறோம் என்ற கேள்வியே இந்த அத்தியாயத்தைப் படிக்கும் போது எனக்கு ஏற்பட்டது. புத்தகங்களில் உள்ள ஞானத்தை தேடாமல் யாரோ அவருக்கு தோன்றியதை சுயநலத்திற்காக திருத்திக் கூறுவதை அல்லது எளிமை படுத்துகிறேன் என்று அன்பரின் பக்தியை திருப்திப்படுத்த, மலர் வை, படத்தை எடுத்துக் கொண்டு சுற்றி வா, ஒளியை கற்பனை செய், சமர்ப்பணம் செய், என்று சொல்வதைக் கேட்பதே நமக்கு சுகமாக இருந்தது. அன்னையை விட , கர்மயோகியை விட - அவர்கள் காட்டிய வழிகளை விட

அவர்கள் தரும் ஞானத்தை விட- தனி மனிதர்கள் நமக்கு முக்கியமாக தோன்றுகின்றனர்.

நமக்கு பிடித்த விஷயத்தை பேசினால் ஆர்வமாக கேட்கிறோம். புரியாதவற்றை பேசினால் கொட்டாவி வருகிறது. ஒன்றும் புரியாமல் பேசினால் குழப்பம் வருகிறது. நம் அறிவுக்கு மீறிய விஷயங்களை பேசினால் தலை காலியானது போல் இருக்கிறது. மனதில், மனதின் அகந்தைக்கு இந்த நிலைகள் பிடிக்காததால், புலன்களுக்கு பிடித்தாற் போல, யாருக்காவது அடிமை போல இருப்பது, அவர்கள் சொல்படி கேட்பது, அதற்கு விசுவாசம், நன்றிக்கடன் பக்தி, சேவை என்று முலாம் பூசுவது இதமாக இருக்கிறது. அந்த மனம், புலன்கள் தரும் எண்ணங்களால் ஆன மனம் என்பதால் அது விலகும் போது தான் நமக்கு உண்மையான ஞானம் வரும்.

அப்படிப்பட்ட மனநிலையை ஆராய்ந்து அதிலிருந்து வெளியே வந்தால் கர்மயோகி தரும் ஞானத்தைப் பெற முடியும். இன்று பல ஆண்டுகள் அன்பராக இருப்பதால், கர்மயோகியின் பல புத்தகங்களையும் படித்ததால் ஏதோ அன்னையைப் பற்றி, வாழ்வைப் பற்றி புரிந்து கொண்டதாக நினைக்கிறோம். அதற்கு ஒரு தேர்வு வையுங்கள். மிகுந்த ஆரம்ப நிலை புத்தகம் என்று நினைக்கும் "அருளமுதம்" புத்தகம் இருந்தால், அதிலுள்ள 30 point -ஐ படியுங்கள். அது முறைகளாக தரப்பட்டு இருக்கும். ஏதாவது ஒன்றின் சாரத்தையாவது முழுமையாக அதன் தத்துவம், சூட்சுமம், பரிணாமம், ஆகியவற்றை புரிந்துக் கொண்டோமா என்று கேட்டால், என்னை பொறுத்தவரை இல்லை என்றே சொல்வேன்.

அடுத்தது ஆத்ம சோதனை - நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை விளக்குகிறது. அதை முழுதும் புரிந்துக் கொண்டோமா. அது தரும் ஞானத்தை பெற்றோமா?

அடுத்தது மனித சுபாவம் - சுமார் 300 point கள் நேரடியாக நம் அறியாமை, வரையறை, தடைகள், மனப்பான்மை, ஆகியவற்றை சுட்டிக் காட்டும் பொக்கிஷம். அது தரும் ஞானத்தை முழுதும் பெற்றோமா?

அடுத்தது நூறு பேர்கள் - அன்பர் எப்படிபட்ட வாழ்வு முறையை பின்பற்ற வேண்டும் என்று சொல்லும் புத்தகம். அதை முழுதும் புரிந்துக் கொண்டோமா, அது சொல்லும் ஆனந்தமயமான வாழ்வைத் தான் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோமா?

இது இல்லாமல் இன்னும் சுமார் 96 புத்தகங்கள் இருக்கிறது. இவற்றில் உள்ள ஞானத்தை நேரடி ஞானமாக பெற முடியவில்லை என்றால், சூட்சுமத்தில் இருக்கும் ஞானத்தை எப்படி நேரடியாகப் பெற முடியும்.

நாம் எப்படி இருக்கிறோம் என்பதற்கும் ஒரு உதாரணம் தருகிறார். நமக்கு சூரியன் நிலையாக இருக்கிறது என்பதும் பூமி தான் சுற்றுகிறது என்பதும் நன்றாகவே தெரியும். ஆனால் இப்போதும் நம் மனம் பூமி, அதாவது அதன் மேல் இருக்கும் நாம் steady ஆக இருக்கிறோம், சூரியன் தான் கிழக்கும் மேற்கும் அலைகிறது என்று தான் மனப்பூர்வமாக நம்புகிறோம். ஒரு முறை கூட, நாம்தான் நகர்ந்து கொண்டு இருக்கிறோம் என்று தத்துவார்த்தமாகக் கூட- ஒரு விஞ்ஞான உண்மையாகக் கூட நினைத்துப் பார்ப்பதில்லை. காரணம் நாம் என்றும் புலன்களை, அது தந்த அனுபவத்தின் அடிப்படைகளை, அது தந்த அறிவை விட்டு ஒரு கணம் கூட வெளியே வர முடிவதில்லை.. அது போலத் தான் நாம் கர்மயோகியின் புத்தகத்தில் இருந்து Life Divine-நிலிருந்து , வாழ்வுக்கான, பரிணாமத்திற்கான பிரம்ம ஞானத்தை தெரிந்துக் கொண்டாலும், நம் புலன் தந்த அறிவிலிருந்து வெளியே வர விரும்பவில்லை என்பதே உண்மை.

உயர் ஞானம் எது என்ற தர்க்கத்தில் ஈடுபடாமல், அது தரும் ஞானம் எது என்று பார்க்காமல், நம் நாம் பெற்ற சில அனுபவங்களில் எது சிறந்தது என்று வாதம் செய்து நம் சுயநலம், விருப்பம், அபிப்பிராயம் ஆகியவற்றை ஒட்டி எடுத்துக் கொள்கிறோம். அன்னை யார். அவர் நோக்கம், அவர் சத்தியம் , அவர் சக்தி, அவர் அருள் ஆகியவற்றை அந்த அனுபவங்கள் அடிப்படையிலேயே புரிந்துக் கொள்ள நினைக்கிறோம். அது பக்தியை வேண்டுமானால் அதிகப் படுத்தலாம். ஞானம் தராது, பரிணாமத்தில் முன்னேற உதவாது. அன்னையை அறிவால் புரிந்து கொள்ள முயல்வதிறகு பதிலாக பதிலாக ஆன்மாவால் புரிந்து கொள்ள முயல்வது புலன்களில் இருந்து வெளியே வந்தால் தான் முடியும். அதற்கு ஒரு வழி detachment . இங்கு பற்றுள்ள நிலைக்கு வேறு ஒரு பொருளை கொடுக்கிறார். அதற்கு தேவையான ஞானமாக நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால் எது வரை நாம் பிணைப்புடன் இருக்கிறோம், எந்த இடத்தில கட்டுப்படுகிறோம், அடிமை படுகிறோம் என்ற கவனமுடன் இருப்பது. அந்த சந்திப்பு தான் நம்மை புலன்களில் தள்ளுகிறது (the junction between bond and bondage). நான் பணக்காரன், எழுத்தாளன், பேச்சாளன், தொழிலதிபர், ஆன்மீகவாதி என்று ஏதோ ஒன்றுடன் identify செய்துக் கொண்டு அதை பெறுவதற்கு முயல்கிறோம். அதற்கான உயர் ஞானத்தைப் பெற-, அதன் மூலம் வாழ்வில் சாதிக்க - முயல்கிறோம். அந்த பிணைப்பு பரிணாமத்திற்கான, சித்தத்திற்கான முன்னேற்றமாக இருக்கும்

வரை, அந்த பிணைப்பு சுதந்திரம் -.ஆனந்தம். அதை ஏன் செய்கிறோம் என்ற ஞானத்தைத் தரும் வரை அது பிணைப்பு. அதை தாண்டி அதற்கு அடிமைப்படும் அளவிற்கு, அது தந்த அனுபவத்தின் அடிப்படையில் அறிவை வளர்த்துக் கொண்டால், அதனை தக்க வைக்க மட்டுமே நம் வாழ்வு முறை என்று மாறிவிட்டால் அதன் பின் உள்ள இறை ஞானத்தை பெற முடியாமல் போய்விடும். அதற்கு அடுத்த முடிவாக, ஒவ்வொரு செயலுக்கும் முன்னும் என் விருப்பம் எது, அன்னை விருப்பம் எது என்று எடுத்துக் கொண்டால், அந்த செயலுக்கான ஞானம் நம் கண் முன் தெரியும். புலன்களின் அடிப்படையான வாழ்க்கையாக அது இல்லாமல், அன்னை பண்புகள், அது தந்த ஞானம் ஆகியவற்றை கொண்ட வாழ்வாக அது இருக்கும். இந்த கேள்விகளுக்கு நமக்கு கிடைக்கும் பதில்கள் தான் நம் முதல் ஆசிரியர் . அதைபற்றி ஆழ்ந்து சிந்திக்கும் போது, அது நேரடி ஞானத்திற்கான அடிப்படைகளை உள்ளடக்கிய பதிலாக, ஞானமாக கிடைக்கிறது. அதாவது அந்த கேள்வி மூலம் நமக்கு உயர்ந்த உண்மை, சத்தியம் எது என்பது புரியும். அதை மனம், உணர்வு, ஆகியவற்றின் ஆழத்தில் அனுபவிப்போம். அந்த அனுபவம் ஆன்மாவின் ஆர்வமாக வாழ்வில் வெளிப்பட்டு -சூழல் அதை சாதிக்க ஆரம்பிக்கும். நமக்கு உட்பார்வை, உள்ளுணர்வு பிடிபட ஆரம்பிக்கும்..

இன்றைய பேச்சில் மனிதன் பகுத்தறிந்து பெறும் ஞானத்தை முக்கியமானதாக எடுத்துக் கொண்டதற்குக் காரணம் கர்மயோகி Pure logic is better than unknown intuition என்று ஒரு கட்டுரையில். சொல்லி இருப்பது எனக்குப் பிடித்து இருந்தது, காரணம் பெரும்பாலான நேரங்களில் எது உள்ளுணர்வு, எது என் விருப்பம், எதை என் உள்ளுணர்வாக நினைக்கிறேன் என்ற குழப்பம் ஏற்படுகிறது.

என்னிடம் வேலைக்கு வருபவர்களில் ஒரு வருடத்தில் எனக்குத் தெரிந்த அத்தனையும் கற்றுக் கொடுப்பேன். Field -க்கு சென்ற பிறகும் அவர் எனக்கு phone போட்டு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால், என் முயற்சிக்கு எந்த பொருளுமில்லை. ஒரு football coach -ஒருவருக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்த பிறகு, filed க்கு சென்று பந்து வந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்று coach -ஐ கேட்க முடியாது. தனக்கு தெரிந்த உயர்ந்ததை, தான் அறிந்தவற்றில் சிறந்ததை அந்த நேரத்தில் செய்ய வேண்டும். அது logic மற்றும் reasoning மூலம் தான் வரும். அது intelligence . ஆனால் ஜெயிப்பதற்காக விளையாடக் கூடாது. அத்தனை போட்டியாளர்களும் அதையே செய்கிறார்கள். நாம் நம் சிறந்ததை தர வேண்டும் என்னும் புத்தியின் சாரம் intellect . வெற்றி அதன் by-product என்பது புரிந்து, சாரத்தை மட்டுமே உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அப்படிப்பட்ட புத்தியின் சாரத்தை

பெறும்போது  அதனால் மற்றவர்கள் move -ன்  சூட்சுமம் புரியும். அது intellectuality தீக்ஷண்யம். அது வெற்றியை உறுதிப் படுத்தும். வேதாந்தம் பகுத்தறிவின் மூலம் மோட்சத்திற்காக பெற்ற  ஞானத்தை - இத்தகைய பகுத்தறிவின் மூலம் வாழ்வுக்காக பெற நினைக்கிறேன். அதையே இங்கு பகிர்ந்து கொண்டேன்.